பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

29 10 2024 **TUESDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. 70 வயதுக்கு மேற்பட்டோருக்கு ஆயுஷ்மான் பாரத் மருத்துவக்காப்பீடு உள்ளிட்ட பல்வேறு மருத்துவ மேம்பாட்டுத் திட்டங்களை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தொடங்கிவைத்தார்.

2. உலகளாவிய அரசியல் சூழ்நிலை மற்றும் பிரச்சினைகள் இந்தியா மீது தாக்கத்தை ஏற்படுத்தி வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

3. ஜார்கண்ட் மாநிலத்தில் இரண்டாவது கட்ட சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறும் 38 தொகுதிகளில் இன்று வேட்புமனு தாக்கல் நிறைவடைந்தது.

4. தேசிய ஒற்றுமை தினத்தையொட்டி, நாட்டின் பல மாநிலங்களில் இன்று ஒற்றுமைக்கான ஓட்டம் நடைபெற்றது.

5. நியூசிலாந்துக்கு எதிரான முன்றாவது மற்றும் இறுதி ஒருநாள் மகளிர் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றிபெற 233 ரன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

நாட்டின் மருத்துவக் கட்டமைப்பை மேம்படுத்தும் பணிகளுக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தன்வந்திரி ஜெயந்தி மற்றும் ஒன்பதாவது ஆயுர்வேத தினத்தையொட்டி, புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் இதனை தெரிவித்தார்.

மக்களின் ஆரோக்கியம் நாட்டின் வளர்ச்சியை துரிதப்படுத்தும் என்று அவர் கூறினார்.

நாட்டு மக்கள் குறிப்பாக ஏழை, எளிய மக்களின் நலனை கருத்தில்கொண்டு ஐந்து முக்கிய சுகாதார கொள்கைகளை மத்திய அரசு தொலைநோக்கு பார்வையுடன் ஏற்படுத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நோய் தடுப்பு, குறித்த நேரத்தில் உடல் பரிசோதனை, குறைந்த செலவில் மருந்துகள் மற்றும் சிகிச்சை, சிறிய நகரங்கள் மற்றும் கிராமப்புறங்களில் சுகாதார வசதி, மருத்துவத்துறையில் தொழில்நுட்பத்தின் விரிவாக்கம் ஆகியவற்றுக்கு மத்திய அரசு உயர்முன்னுரிமை அளித்து திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அவர் கூறினார்.

நாட்டு மக்களின் நலனையும், மகிழ்ச்சியையும் கருத்தில்கொண்டு, இன்று கொண்டாடப்படும் ஆயுர்வேத தினம் உலகின் 150 நாடுகளிலும் கொண்டாடப்படுவதாக பிரதமர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், 12 ஆயிரத்து 850 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய மருத்துவத் திட்டங்களுக்கு பிரதமர் அடிக்கல் நாட்டினார்.

இதில், 70 வயதுக்கு மேற்பட்டோருக்கு ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின்கீழ், மருத்துவக்காப்பீடு பெறுவதற்கான விரிவாக்கத் திட்டத்தையும் அவர் தொடங்கிவைத்தார்.

இதனையடுத்து, அனைத்து மூத்த குடிமக்களும் வருமான வரம்பின்றி பிரதமரின் மருத்துவக்காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், உயர் சிகிச்சை பெறுவதற்கு வழி ஏற்பட்டுள்ளது.

அகில இந்திய ஆயுர்வேத கல்விக்கழகத்தின் இரண்டாவது கட்டத்தையும் பிரதமர் தொடங்கிவைத்தார்.

பஞ்சகர்மா மருத்துவமனை, ஆயுர்வேத மருந்தகங்கள், விளையாட்டு வீரர்களுக்கான மருந்துப்பிரிவு, ஆயுர்வேத மத்திய நூலகம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க தொழில் மையம், 500 இருக்கைகள் கொண்ட அரங்கம் உள்ளிட்டவை இரண்டாவது கட்ட பணிகளில் இடம்பெற்றுள்ளன.

மத்தியப்பிரதேச மாநிலத்தில் மூன்று புதிய மருத்துவக்கல்லூரிகளையும் பிரதமர் இன்று திறந்துவைத்தார்.

இமாச்சலப்பிரதேசம், மேற்குவங்கம், பீகார், உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், அஸ்ஸாம் மற்றும் புதுதில்லியில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனைகளில் மருத்துவ விரிவாக்கத் திட்டங்களையும் அவர் தொடங்கிவைத்தார்.

எய்ம்ஸ் மருத்துவமனைகளில் **Jan Aushadhi** மக்கள் மருந்தகங்களையும், சத்தீஸ்கர் மாநிலம் பிலாஸ்பூரில் உயர் சிறப்பு மருத்துவப்பிரிவு மற்றும் ஒடிஷா மாநிலம் பர்காரில் உயிர்காக்கும் சிகிச்சை பிரிவு ஆகியவற்றையும் அவர் தொடங்கிவைத்தார்.

மத்தியப்பிரதேச மாநிலத்தில் ஐந்து செவிலியர் கல்லூரிகளுக்கும் பிரதமர் அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாடு, ராஜஸ்தான், மணிப்பூர், கர்நாடாக, இமாச்சலப்பிரதேச மாநிலங்களில் ஆயுஷ்மான் பாரத் மருத்துவ கட்டமைப்பு இயக்கத்தின்கீழ், பல்வேறு திட்டங்களையும் பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தொடங்கிவைத்தார்.

ஆயுஷ்மான் பாரத் திட்டம் 70 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்களுக்கு விரிவாக்கம் செய்யப்பட்டிருப்பது தங்களுக்கு கிடைத்த தீபாவளி பரிசு என்று சேலம் மாவட்டத்தை சேர்ந்த மூத்த குடிமக்கள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

*(சவுண்ட் பைட் - மூத்த குடிமக்கள் - 20 செகண்டஸ்)*

**<<<<<<>>>>>>**

உலகளாவிய அரசியல் சூழ்நிலை மற்றும் பிரச்சினைகள் இந்தியா மீது தாக்கத்தை ஏற்படுத்தி வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று ராணுவ தளபதிகள் மாநாட்டில் நிறைவுரையாற்றிய திரு ஜெய்சங்கர், எந்தவொரு சூழ்நிலையையும் எதிர்கொள்ளும் வகையில் முப்படைகளும் தயார் நிலையில் இருக்க வேண்டியது அவசியம் என்று குறிப்பிட்டார்.

சில நாடுகளுக்கு இடையிலான போர் சூழல், சவால்கள் பெரிய அளவில் பாதுகாப்பு தொடர்பான அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் கூறினார்.

தொழில்நுட்ப ரீதியாக பாதுகாப்பை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் திரு ஜெய்சங்கர் வலியுறுத்தினார்.

கடந்த இரண்டு நாட்களாக புதுதில்லியில் நடைபெற்ற ராணுவ தளபதிகள் மாநாட்டில் கலந்துகொண்ட முப்படைகளின் தளபதி ஜெனரல் அனில் சௌகான், முப்படைகளும் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கான செயல் திட்டத்தை உருவாக்க வேண்டியதன் அவசியம் என்று கூறினார்.

புதிதாக எழுந்துள்ள சவால்களை எதிர்கொள்ளும் வகையில், தொழில்நுட்ப ரீதியாக முப்படைகளும், நவீன மயமாக்கும் முயற்சிகளில் ஈடுபட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>>

ஜார்கண்ட் மாநிலத்தில் இரண்டாவது கட்டமாக அடுத்த மாதம் 20-ஆம் தேதி சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறும் 38 தொகுதிகளில் இன்று வேட்புமனு தாக்கல் நிறைவடைந்தது.

வேட்புமனுக்கள் பரிசீலனை நாளை நடைபெறும்.

வேட்புமனுக்களை திரும்பப்பெற அடுத்த மாதம் ஒன்றாம் தேதி கடைசி நாளாகும்.

இதனிடையே, இம்மாநிலத்தில் 43 தொகுதிகளில் அடுத்த மாதம் 13-ஆம் தேதி நடைபெறவுள்ள முதற்கட்ட தேர்தலுக்கான வேட்புமனுக்கள் பரிசீலனை நிறைவடைந்துள்ளது.

மொத்தம், 805 பேர் வேட்புமனு தாக்கல் செய்திருந்த நிலையில், 62 பேரின் மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

743 பேரின் மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

நாளை வேட்புமனுக்களை விலக்கிக்கொள்ள கடைசி நாளாகும்.

<<<<<<>>>>>>

குஜராத் மாநிலம் அகமதாபாதில் ஒற்றுமைக்கான மாரத்தான் ஓட்டத்தை முதலமைச்சர் திரு பூபேந்திர பட்டேல் இன்று காலை கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

சர்தார் வல்லபாய் பட்டேலின் பிறந்த நாள் தேசிய ஒற்றுமை தினமாக கொண்டாடப்படுவதையொட்டி இந்த ஒற்றுமைக்கான ஓட்டம் நடைபெற்றது.

நாட்டின் பல பகுதிகளிலும் தேசிய ஒற்றுமை தினத்தையொட்டி, ஒற்றுமைக்கான மாரத்தான் ஓட்டம் நடத்தப்பட்டது.

ஜம்மு காஷ்மீரின் ஸ்ரீநகரில் ஒற்றுமைக்கான ஓட்டத்தை முதலமைச்சர் திரு ஒமர் அப்துல்லா கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

இதில், அரசு அதிகாரிகள், காவல்துறையினர், ரிசர்வ் காவல்படையினர் மற்றும் பொதுமக்களும் அதிக அளவில் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் பேசிய முதலமைச்சர் திரு ஒமர் அப்துல்லா, ஒற்றுமைக்கான ஓட்டம் நாட்டின் ஒருமைப்பாட்டை வலியுறுத்துவதாக குறிப்பிட்டார்.

இந்த நிகழ்ச்சியின்போது ஒற்றுமைக்கான உறுதிமொழி ஏற்கப்பட்டது.

<<<<<<>>>>>>

ஜம்மு காஷ்மீரில் ரஜோலி மற்றும் பூஞ்ச் மாவட்டங்களில் உள்ள அடர்ந்த வனப்பகுதிகளில் ராணுவத்தினர் தீவிர ரோந்து பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய கண்காணிப்பு அமைப்புகளையும், ஆயுதங்களையும் இப்பணிகளின்போது ராணுவம் எடுத்துச்சென்றுள்ளது.

அண்மையில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலையடுத்து, ஜம்மு காஷ்மீரில் கண்காணிப்புப்பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

<<<<<<>>>>>>

கிரிக்கெட் சூதாட்டம் மற்றும் கிரிக்கெட் வர்ணணைகளை சட்ட விரோதமாக ஒலிபரப்பு செய்தது உள்ளிட்ட புகார்கள் தொடர்பாக அமலாக்கப்பிரிவினர் மும்பையின் எட்டு இடங்களிலும், குஜராத் மாநிலம் கட்ச்சிலும் இன்று சோதனை நடத்தினர்.

நான்கு கோடி ரூபாய் ரொக்கம், வங்கி ஆவணங்கள் மற்றும் வெள்ளி கட்டிகளையும் அமலாக்கப்பிரிவினர் பறிமுதல் செய்துள்ளனர்.

துபாயில் உள்ள ஒரு நிறுவனம் இந்த குற்றச்செயல்களில் தொடர்பில் உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

நிதி மற்றும் தொழில்நுட்ப ரீதியாகவும், கிரிக்கெட் சூதாட்டத்திற்கும், சட்ட விரோத ஒலிபரப்பிக்கும் இந்த நிறுவனம் உதவியிருப்பதாகவும் அமலாக்கத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

நியூசிலாந்துக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி ஒருநாள் மகளிர் கிரிக்கெட் போட்டியில் 233 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிவரும் இந்தியா சற்றுமுன் வரை 25 ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு 112 ரன் எடுத்துள்ளது.

அகமதாபாத்தில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் முதலில் பேட் செய்த நியூசிலாந்து 49 புள்ளி ஐந்து ஓவரில், 232 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

---------

ஆஸ்திரேலிய சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைதேகி சௌத்ரி - ஸ்ரீவள்ளி ரஷ்மிகா இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில், இந்த இணை, 7-6, 6-4 என்ற செட் கணக்கில் தைவானின் **Yu Yun Li -** ஸ்லோவேக்கியாவின் **Nina** இணையை வென்றது.

இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் வைதேகி சௌத்ரி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

------------

தமிழகம் - சத்தீஸ்கர் அணிகளுக்கு இடையேயான ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டி டிரா ஆனது.

------------

ப்ரோ கபடி லீக் போட்டியின் இன்றைய ஆட்டங்களில் பெங்கால் அணி - புனே அணியையும், பெங்களூரு அணி - தில்லியையும் எதிர்கொள்கின்றன.

<<<<<<END>>>>>>